**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 06.06.2026
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
## "Connect & Grow – Food Business Meet"

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம்புத்தூரில் செயல்பட்டு வரும் உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையம், 05 ஜூன் 2026 அன்று "Connect & Grow – Food Business Meet" என்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. நிகழ்ச்சியில் உணவு பதப்படுத்தல் துறையில் செயல்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSMEs), ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்களுக்கிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், துவக்க நிகழ்வில், முனைவர் எல். அருள் அவர்கள் துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல், அனைவரையும் வரவேற்று, வேகமாக வளர்ந்து வரும் உணவு பதப்படுத்தல் துறையில் புதுமை, மதிப்புக் கூட்டுதல் மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

முனைவர் ந. செந்தில் அவர்கள் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்பவியல் மையம் மற்றும், காக்ஸ்பிட் இயக்குநர், TNAPEx – புதிய தயாரிப்பு மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவியின் மூலம் MSME-களை ஆதரிக்கும் திட்டம் குறித்து விளக்கமளித்தார். தொழில்துறை மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு, புதுமை, தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் சந்தைத் தேவைகளை பூர்த்தி செய்யும் தரமான உணவுப் பொருட்கள் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுவதாக அவர் குறிப்பிட்டார். மேலும், TNAPEx திட்டத்தின் தொழில்நுட்ப பங்குதாரராக செயல்படும் காக்ஸ்பிட், தயாரிப்பு உருவாக்கம், பரிசோதனை, தரச் சரிபார்ப்பு, ஒழுங்குமுறை வழிகாட்டுதல் மற்றும் வணிகமயமாக்கல் ஆகிய துறைகளில் தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை வழங்கி, உணவு பதப்படுத்தல் துறையின் போட்டித்திறன் மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

முனைவர் சு. கார்த்திகேயன் அவர்கள் இயற்கை வள மேலாண்மை இயக்குநர், அறிவியல் அடிப்படையிலான தயாரிப்பு மேம்பாட்டிற்காக ஆராய்ச்சி நிறுவனங்களும் தொழில்முனைவோரும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தயாரிப்புகளின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த தயாரிப்பு பரிசோதனை, தர உத்தரவாதம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தரநிலைகளைப் பின்பற்றுவது அவசியம் என வலியுறுத்தினார். மேலும், NABL அங்கீகாரம் பெற்ற

ஆய்வகங்கள் மற்றும் APEDA விதிமுறைகள் தயாரிப்புகளின் நம்பகத்தன்மையை உயர்த்துவதோடு, சந்தை அணுகலை எளிதாக்கி, ஏற்றுமதியை ஊக்குவித்து, நுகர்வோர் நம்பிக்கையை அதிகரிக்க உதவுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். அறிவியல் சரிபார்ப்புகள் மூலம் பண்ணையிலிருந்து சந்தை வழியாக நுகர்வோருக்கு பாதுகாப்பான மற்றும் தரமான தயாரிப்புகளை கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

திரு. அ. கீர்த்திவாசன், அவர்கள் திருச்சி TNAPEx மண்டல மையம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு மையத்தின் திட்ட மேலாளர் மற்றும் குழுத் தலைவர், TNAPEx திட்டத்தின் மூலம் தொடக்க நிறுவனங்கள் மற்றும் MSME–களுக்கு வழங்கப்படும் விரிவான ஆதரவுகள் குறித்து விளக்கமளித்தார். புதிய தயாரிப்பு உருவாக்கம், உற்பத்தி வசதி அடையாளம் காணுதல், உற்பத்தி ஆதரவு, தயாரிப்பு பதிவு, உரிமம் பெறுதல், ஒழுங்குமுறை இணக்கம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள், சந்தை இணைப்புகள், வாங்குபவர்–விற்பனையாளர் சந்திப்புகள், பிராண்டிங் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட முழுமையான சேவைகள் TNAPEx மூலம் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார். தொழில்முனைவோர் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி புதுமைகளை விரைவுபடுத்தி, தங்களது வணிகங்களை விரிவுபடுத்தி, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தைகளை அடைய வேண்டும் என அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியின் நிறைவில், முனைவர் வி. ராஜன்பாபு தாவர உயிரித் தொழில்நுட்பத் துறை உதவிப் பேராசிரியர் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியின் வெற்றிக்கு பங்களித்த சிறப்பு விருந்தினர்கள், TNAPEx அதிகாரிகள், தொழில்முனைவோர், பங்கேற்பாளர்கள் மற்றும் காக்ஸ்பிட் ஒருங்கிணைப்புக் குழுவினருக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***